## மொரப்பூர் வனச்சரகத்தில்

# மானை வேட்டையாடிய இருவருக்கு அபராதம்!

மொரப்பூர், ஜூலை.14–

வனச்சரக அலுவலர் முகுந்தனுக்கு புள்ளிமானை வேட்டையாடியதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தர்மபுரி வனப்பாதுகாப்புப்படை வனச்சரக அலுவலர் பெரியண்ணன், வனவர்கள் பவித்ரா, விவேகானந்தன், அசோகன் ஆகியோர் கொண்டகுழுவினர் மோரப்பூர் வனச்சரகம், வரதாப்பட்டி பிரிவு, அண்ணாலம்பட்டி கிராமத்தில் ரோந்து சென்றனர். அப்போது, துப்பாக்கியால் மானை வேட்டையாடிய ஆண்டிப்பட்டி புதூர் கிராமத்தை சேர்ந்த ரகு (52),

சாமலிங்கம் (66) ஆகியோரை வனத்துறையினர் கைது செய்து அவர்கள் பதுக்கி வைத்திருந்த ஒற்றைக்குழல் துப்பாக்கி, தோட்டாக்கள். 2டூவீலர்கள்.

கத்தி, கொடுவாள், மற்றும் இறந்த மானின் சடலம் ஆகியவற்றை கைப்பற்றினர் தலைமறைவான கன்னப்பாடி கிராமத்தை சேர்ந்த மாதையன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிடிபட்ட இருவர் மீது வனஉயிரின குற்ற வழக்கு பதிவு செய்து, மாவட்ட வன அலுவலர் முன் ஆஜர் படுத்தப்பட்டு பின் மாவட்ட அலுவலர் உத்தரவின் படி 1.50 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.






கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

## சங்கராபுரம் அருகே

# 3 டன் ரேஷன் அரிசி கடத்தியவர் கைது!

சங்கராபுரம், ஜூலை.14–

சங்கராபுரம் ஆற்றுப்பாலம் அருகே சப் இன்ஸ்பெக்டர் பிரதாப்குமார் வாகன சோதனையில் ஈடுபட்டார். அப்போது, அந்த வழியாக வந்த பிக்அப் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில், 3 டன் ரேஷன் அரிசி கடத்தி வந்தது தெரியவந்தது.

விசாரணையில், அரிசி கடத்தியவர் சங்கராபுரம் அடுத்த எஸ்.வி.பாளையம் கிராமத்தைச் சேர்ந்த அய்யாகண்ணு மகன் விநோத்குமார், 32; என தெரியவந்தது. உடன் அவரை கைது செய்து, வேன் மற்றும் ரேஷன் அரிசி மூட்டைகளை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.



## புதுச்சத்திரம் அருகே

# 30 கிலோ ஹான்ஸ், குட்கா பறிமுதல்!

### 2 பேர் கைது!!

ராசிபுரம், ஜூலை.14–

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் அருகே தொவ்வாய்பட்டி பகுதியில் மளிகைக் கடை நடத்தி வந்த ஆனந்தன் (44) என்பவர், கடை மற்றும் வீட்டில் தடை செய்யப்பட்ட ஹான்ஸ், குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக காவல் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, புதுச்சத்திரம் காவல் ஆய்வாளர் வசந்தா தலைமையிலான போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, இரண்டு மூட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 30 கிலோ ஹான்ஸ், குட்கா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து ஆனந்தனை கைது செய்து விசாரணை நடத்தியதில், திருமலைபட்டி, தொவ்வாய்பட்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பெட்டிக்கடைகளுக்கு தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் மேலும் இருவரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்தும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக புதுச்சத்திரம் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## பாலக்கோடு ஒன்றியத்தில்

# பள்ளிகள் திறந்து 2 மாதங்கள் ஆகியும் சீருடை வழங்கவில்லை!

### மாணவர்களின் பெற்றோர் குற்றச்சாட்டு!!

பாலக்கோடு.ஜூலை.14–

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி என 150க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.இப்பள்ளிகளில் சுமார் 6000 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். ஆசிரியர்களின் முயற்சியால்

நடப்பு கல்வியாண்டில் 1 வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரைபுதியதாகசுமார்1500மாணவர்கள்இப்பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.மாணவ மாணவிகள் பள்ளியில் சேர்ந்து இரண்டு மாதங்கள் ஆகியும் இதுவரை மாணவர்களுக்கு சீருடை வழங்கவில்லை.இது குறித்து பெற்றோர்கள் கேள்வி கேட்டால் கல்வி அதிகாரிகள் அலட்சியமானபதில் கூறுவதாக பெற்றோர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். தொடக்க பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளை கண்காணிக்க வேண்டியது வட்டார கல்வி அலுவலர்களின் பொறுப்பு ஆகும். ஆனால் இதில் அவர்கள் மெத்தனம் காட்டி வருகின்றனர். அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை ஆண்டிற்கு ஆண்டு குறைந்து கொண்டு வரும் நிலையில் மாணவர்களுக்கு சீருடை கிடைக்காததால் பெற்றோர்கள் தனியார் பள்ளியை நோக்கி செல்லும் சூழ்நிலை உருவாகி உள்ளது. எனவே தமிழக அரசு மாணவர்களுக்கு தாமதமின்றி வழங்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிருஷ்ணகிரியில் பரபரப்பு:

# வீட்டிற்குள் புகுந்து நடனமாடிய பாம்புகள்!

### தீயணைப்பு வீரர்கள் பிடித்து காட்டுக்குள் விட்டனர்!!

கிருஷ்ணகிரி, ஜூலை.14 –

கிருஷ்ணகிரி சத்யசாய்நகர் பகுதியை சேர்ந்தவர் சாகுல் ஹமீது. ஓய்வு பெற்ற ராணுவ வீரர் ஆவார். இவரது வீட்டிற்குள் நேற்று திடீரென 2 சாரை பாம்புகள் புகுந்தன. சிறிது நேரத்தில் 2 சாரை பாம்புகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு நடனம் ஆட தொடங்கியன. இதை கண்ட சாகுல் ஹமீது குடுபத்தினர் அலறியடித்து வீட்டை விட்டு வெளியே ஓடி விட்டனர். பின்னர் உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதை தொடர்ந்து சம்பவ இடத்திக்கு விரைந்து வந்த தீயணைப்பு துறை வீரர்கள் சுமார் 7 அடி நீளம் கொண்ட பாம்புகளில் ஒரு பாம்பை லாவகமாக பிடித்தனர். ஒரு பாம்பு அங்கிருந்து தப்பி ஓடி விட்டது. பின்னர் அதே வீட்டு வாசலின் அருகே பதுங்கி இருந்த கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பு ஒன்றையும் தீயணைப்புத்துறை வீரர்கள் பிடித்தனர். தொடர்ந்து பிடிபட்ட 2 பாம்புகளையும் அடர்ந்த காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று விட்டனர்.

பொதுவாக காட்டு பகுதியில் தான் பாம்புகள் நடனமாடும் காட்சிகள் பதிவாகும். ஆனால் பொதுமக்கள் குடியிருக்கும் வீட்டிற்குள் புகுந்த பாம்புகள் நடனமாடிய சம்பவம் நேற்று அப்பகுதியில் பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது.



# ராசிபுரத்தில் தெருநாய்கள் தொல்லை அதிகரிப்பு!

### மூதாட்டியை துரத்தி கடிக்கும் சிசிடிவி காட்சிகள் வைரல்!!

ராசிபுரம், ஜூலை.14–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நகரின் டி.வி. எஸ்.சாலை பகுதியில் தெருநாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த பகுதியில் பல்வேறு தனியார் மருத்துவமனைகள் செயல்பட்டு வரும் நிலையில், சிகிச்சைக்காக வரும் முதியவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை தெருநாய்கள் துரத்தி கடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் சார்பில் பலமுறை ராசிபுரம் நகராட்சிக்கு மனு அளித்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், மருத்துவமனைக்கு நடந்து சென்ற முதியவரை தெருநாய்கள் துரத்தி கடிக்கும் காட்சி அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி, தற்போது சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராசிபுரம் நகரின் பல பகுதிகளிலும் தெருநாய்களின் தொல்லை அதிகரித்து வருவதால், பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து தெருநாய்களை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.






நல்லம்பள்ளி அருகே செல்வகருப்பசாமி கோவிலில் கும்பாபிஷேக விழா நடந்தது. இதில் ஏராளமானனோர் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## நல்லம்பள்ளி அருகே

# செல்வகருப்பசாமி கோவில் கும்பாபிஷேக விழா !

### திரளான பக்தர்கள் பங்கேற்பு!!

நல்லம்பள்ளி:ஜூலை14

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் நார்த்தம்பட்டி வெள்ளாளன் கொட்டாய் கிராமத்தில் எழுந்தருளியுள்ள புகழ் பெற்ற ஸ்ரீ செல்வ கருப்பசாமி மற்றும் ஸ்ரீ விஜய கணபதி ஸ்ரீ விஜய குருநாத ஸ்வாமி திருக்கோவிலில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் பணிகள் அனைத்தும் முடிவடைந்ததைத் தொடர்ந்து இன்று கோவிலில் நூதன ஆலய ஜீர்ணோதாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழாவானது திரளான பக்தர்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது, இதையொட்டி இன்று காலை 6 மணியளவில் மங்கள இசையுடன் தொடங்கிய கும்பாபிஷேகமானது விக்னேஸ்வர பூஜை, கோ பூஜை, சோமகும்ப பூஜை கும்ப பூஜை, புண்யாக வாஜனம், பிம்ப ரக்ஷசா பந்தனம், ஜெபங்கள், பாராயணம், ஸுக்தாதிகள் பாராயணம், விஷேச மூலிகை திரவிய ஹோமங்கள், ஷன்னவதி ஹோமங்கள், பிம்பாகுதி, ஸ்பரிஷாகுதி, பூர்ணாகுதி, கஜ பூஜை என பல்வேறு சிறப்பு பூஜைகள் செய்து பின்னர் விழாவின் முக்கிய நிகழ்வாக யாகசாலையில் இருந்து மேலத்தளங்கள் முழங்க தீர்த்த குடங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு அருள்மிகு ஸ்ரீ லந்தக்கோட்டை கருப்பசாமி ஆலயத்தின் அருள் வாக்கு ஆசான் ஸ்ரீ செல்வம் சுவாமிகள் ஸ்ரீ செல்வ கருப்பசாமிக்கு புனித நீரை ஊற்றி மஹா கும்பாபிஷேகமானது வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து மூலவர் ஸ்ரீ செல்வ கருப்பசாமி மற்றும் ஸ்ரீ விஜய கணபதி ஸ்ரீ விஜய குருநாத ஸ்வாமிக்கு,மஞ்சள், சந்தனம், பால், திருநீறு என பல வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனை காட்டப்பட்டது. இதில் தருமபுரி, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், பெங்களூரு, சென்னை, மற்றும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர் பின்பு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது,இந்த

விழா ஏற்பாடுகள் கருப்பசாமி சிவப்பிரியன் மற்றும்

கரும்புக்கோட்டை ஸ்ரீ கருப்புசாமி ஆலயம் கோவில் நிர்வாகம் செய்திருந்தனர்.

செய்திகளை முந்தித்தருவது
மாலை முரசு
தினந்தோறும் படியுங்கள்

## தர்மபுரி மாவட்டத்தை

# வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

### கலெக்டர் பேச்சு!!

தர்மபுரி, ஜூலை.14–

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 607 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் பெற்றுகொண்டார்.

இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.13.73 இலட்சம் மதிப்பீட்டில் 21 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மனுக்களை பெற்றுகொண்டு, மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் சாலைவசதி, குடிநீர்வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல், சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ், வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் ஓய்வூதியத் தொகை உள்ளிட்ட இதர உதவித் தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகைகள், உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் 607 மனுக்கள் வரப்பெற்றன.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கு உரிய தீர்வினை உடனுக்குடன் வழங்கிட வேண்டுமெனவும், பொதுமக்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்கள் மீது துறை அலுவலர்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அதற்கான தீர்வினை விரைந்து காண வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தருமபுரி மாவட்டத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தெரிவித்தார். இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின்சார்பாக,முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை அவயங்கள் அளவெடுக்கப்பட்டு, இம்மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.13.73 இலட்சம் மதிப்பீட்டில் 21 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் வழங்கினார்.தொடர்ந்து, வருவாய் துறையின் சார்பில் 2 நபர்களுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணையினை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பா.ஷெர்லி ஏஞ்சலா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் பெ.கி. கோவிந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்னையினர் நல அலுவலர் வே.பண்டரிநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : பேலகொண்டபள்ளி கிராமம், தளி ரோடு, தேன்கனிக்கோட்டை, பேலகொண்டபள்ளி - 635 114, (தமிழ்நாடு)
போன் : +91 04347 233509, பேக்ஸ் : + 91 04347 233414 E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**அறிவிப்பு**

கம்பெனிகள் சட்டம், 2013 ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) மற்றும் முறையே 5 மே, 2020, 8 ஏப்ரல், 2020, 13 ஏப்ரல், 2020, 13 ஜனவரி, 2021, 05 மே, 2022, 28 டிசம்பர், 2022, 25 செப்டம்பர், 2023, 19 செப்டம்பர் 2024 மற்றும் 22 செப்டம்பர் 2025 (பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்) தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை எண். 20/2020, 14/2020, 17/2020, 2/2021, 2/2022, 10/2022, 09/2023, 09/2024 மற்றும் 03/2025 மற்றும் சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதி 12 மே 2020, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதி 15 ஜனவரி 2021, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி 13 மே 2022, SEBI/HO/CFD/PoD-2/CIR/2023/4 தேதி 5 ஜனவரி 2023, SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதி 7 அக்டோபர் 2023 மற்றும் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 தேதி 3 அக்டோபர் 2024 ஆகியவற்றுக்கு இணங்க, ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், **தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் (நிறுவனம்) 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) ஆகஸ்ட் 04, 2026 செவ்வாய்க்கிழமை மதியம் 12:00 மணிக்கு காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.**

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் கீழ், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்கலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்க தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை கம்பெனி வழங்குகிறது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு (e-voting) வசதியையும் கம்பெனி வழங்குகிறது. மின்னணு வழிமுறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வரும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவு 103-ன் கீழ், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கைக்காக கணக்கிடப்படுவார்கள்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.taal.co.in மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் NSDL இணையதளம் www.evoting.nsdl.com.–ல் கிடைக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை பெறுவதற்காக காகித வடிவில், அத்துடன் மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி/வைப்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், கம்பெனி பதிவாளரும், பங்கு மாற்று முகவருமான பிக் ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் investor@bigshareonline.com அல்லது கம்பெனியின் secretarial@taal.co.in–ல் அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்பது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு குறித்த வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு ஜூலை 31, 2026 (காலை 9.00 மணி) அன்று துவங்கி ஆகஸ்ட் 03, 2026 (மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது. ஆகஸ்ட் 03, 2026 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

கட்-ஆப் தேதியில் அதாவது ஜூலை 29, 2026 அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மைபயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதியை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினர்களாகும் நபர்கள், உள்நுழைவு முகவரி (login ID) மற்றும் கடவுச்சொல்லை (password) பெறுவதற்கு investor@bigshareonline.com அல்லது secretarial@taal.co.in க்கு எழுதலாம்.

ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதி கிடைக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து, www.evoting.nsdl.com -ல் உதவிப் பிரிவில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ("FAQs") மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது evoting@nsdl.co.in க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**தனேஜா ஏரோஸ்பேஸ் அண்டு ஏவியேஷன் லிமிடெட்**

தேதி : 14.07.2026 **அஸ்வினி நவரே**
இடம் : பூனே **நிறுவன செயலாளர்**

Edited, and Published by S. N. Selvam on behalf of M/s. Chennai Murasu Private Ltd, from No.K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem – 636 004 and Printed by P.Senthil Azhagan at Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem –636 004. RNI Registration No. TNTAM/2016/75064.

# 2 குழந்தைகளை தவிக்க விட்டு காதலனுடன் பெண் ஓட்டம்!

ஓமலூர்.ஜூலை.14–
தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 9 வது வார்டு அருணாச்சலம்புதூர் பகுதியைச் சேர்ந்தவர் பழனி (34 )இவரது மனைவி விஜயலட்சுமி (22) இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில் குடும்பத்துடன் கர்நாடகாவில் தங்கி கல் உடைக்கும் தொழில் செய்து வந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 6 ம் தேதி திடீரெனகாணாமல்போனவிஜயலட்சுமி குறித்து அவரது கணவர் உறவினர் வீடுகளில் தேடியும் கிடைக்காத நிலையில் தாரமங்கலம் போலீசில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த 10ம் தேதி சங்ககிரி அருகில் உள்ள படைவீடு பகுதியைச் சேர்ந்த கல் உடைக்கும் தொழிலாளி சவுந்தர்ராஜன் என்பவரின் மகன் நந்தகுமார்(21 )என்பவர் உடன் ஓட்டம் பிடித்தது தெரிய வந்துள்ளது. இது பற்றி தகவல் அறிந்த போலீசார் நந்தகுமாரையும் விஜயலட்சுமியும் பிடித்து தாரமங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது விசாரணையின் போது விஜயலட்சுமி தனது கணவருடன் செல்ல விருப்பமில்லை என்றும் காதலன் நந்தகுமார் உடன் செல்வதாகவும் கூறினார். அப்போது போலீசார் நீதிமன்றம் சென்று முறையாக விவாகரத்து பெற்றால் மட்டுமே நந்தகுமாருடன் செல்ல முடியும் என அறிவுறுத்திய நிலையில் தனது 2 வயது மற்றும் 1 வயது குழந்தைகளையும் விட்டுவிட்டு தனது பெற்றோருடன் சென்று விட்டார். இதனால் வேதனை அடைந்த கணவர் பழனி தனது இரு குழந்தைகளையும் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

இரண்டு குழந்தைகளை தவிக்க விட்டு விட்டு காதலனுடன் பெண் ஓட்டம் பிடித்த சம்பவம் தாரமங்கலம் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 32–வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி 3 நாள் நிகழ்ச்சியில் மாவட்டத்தின் சிறப்பு விளையாட்டான குரு குழுவினரின் மல்லர் கம்பம் விளையாட்டு சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

### அம்பேத்கர் சிலை விவகாரம்:

# கெங்கவல்லி ஒதியத்தூரில் 5 மாவட்ட போலீஸ் கண்காணிப்பு!

தம்மம்பட்டி, ஜூலை 14–
கெங்கவல்லி அருகே அம்பேத்கர் சிலை மூடல் விவகாரத்தில், ஒதியத்தூரில் 5 மாவட்ட போலீசார், கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே ஒதியத்தூர் கிராமத்தில், மூடி வைத்திருந்த அம்பேத்கர் சிலையை, மர்ம நபர்கள், கடந்த 11 ஆம் தேதி திறந்தனர்.இதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.சிலையைமூடுவதற்கு சென்றபோது, கல்வீச்சு சம்பவம் ஏற்பட்டதால், போலீசார் தடியடி நடத்தினர்.

கல்வீச்சு சம்பவத்தில் ஈடுபட்ட 15 பேரை, கெங்கவல்லி போலீசார் கைது செய்தனர். கோவை மேற்கு மண்டல ஐ.ஜி., ரம்யாபாரதி தலைமையிலான போலீசார், ஒதியத்தூர் கிராமத்தில் ஆய்வு செய்து, போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடும்படி உத்தரவிட்டார். சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் கோவை மாவட்ட போலீசார், 350 க்கும் மேற்பட்டோர், ஒதியத்தூர் கிராமத்தில் முகாமிட்டு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், சிலை அமைத்த ஒருதரப்பினர், அம்பேத்கர் சிலையின் அருகே உள்ள ராஜிவ், காமராஜர் ஆகிய சிலைகளை மூட வேண்டும் என்றனர். கோவை டி.ஐ.ஜி., சாமிநாதன் தலைமையிலான போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் ராஜிவ், காமராஜர் சிலைகளை மூடினர்.

# கெங்கவல்லி தாலுகாவில் 11 வி.ஏ.ஓ. க்கள் மாற்றம்!

தம்மம்பட்டி, ஜூலை 14–
கெங்கவல்லி தாலுகாவில் கலந்தாய்வு முறையில் 11 வி.ஏ.ஓ., க்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

சேலம் மாவட்டத்தில், நகர்புறத்தில் ஓராண்டு,கிராமப்பகுதியில்,மூன்றாண்டு பணிநிறைவு வி.ஏ.ஓ., க்கள் கலந்தாய்வு முறையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி,கெங்கவல்லி தாலுக்காவில், ஆணையம்பட்டி முத்துராமலிங்கம் தம்மம்பட்டிக்கும், தம்மம்பட்டி நரேஷ்குமார் ஆணையம்பட்டிக்கும், கொண்டையம்பள்ளி சரிதா செந்தாரப்பட்டி தெற்கிற்கும், வேப்படி சக்திவேல் செந்தாரப்பட்டி வடக்கிற்கும், கோனேரிப்பட்டி சேட்டு தெடாவூர் தெற்கிற்கும், செந்தாரப்பட்டி வடக்கு அசோக்குமார் தெடாவூர் வடக்கிற்கும், 74 கிருஷ்ணாபுரம் சடையன் கோனேரிப்பட்டிக்கும், நாகியம்பட்டி சரவணன் 74 கிருஷ்ணாபுரத்துக்கும், செந்தாரப்பட்டி தெற்கு பெரியண்ணன் நாகியம்பட்டிக்கும், தெடாவூர் தெற்கு இளவரசன் கொண்டையம்பள்ளிக்கும், தெடாவூர் கிருபாகரன் வேப்படிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்ந்து, மாவட்டத்தில், 14 தாலுகாவிலும், வி.ஏ.ஓ., க்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



முன்னாள் முதல்வர் காமராஜர் 123 வது பிறந்தநாளை கொண்டாடுவது சம்பந்தமாக நாமக்கல் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் திருச்செங்கோடு அலுவலகத்தில் மாவட்ட தலைவர் சதீஷ்குமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரியில் நடந்த

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 452 மனுக்கள் குவிந்தன!

கிருஷ்ணகிரி, ஜூலை 14–
கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தலைமை வகித்தார். இது குறித்து அவர் கூறுகையில்,

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவேற்றம் செய்ய ஏற்கனவே 14 பதிவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று (நேற்று) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடம் வீட்டுமனைப்பட்டா, வேலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி, மின் இணைப்பு மற்றும் மகளிர் உரிமைத்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகளை குறித்து 452 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுதாரருக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமில், தேன்கனிக்கோட்டையை சேர்ந்த மாற்றுத்திறனாளி நாகராஜ் என்பவர், ஊன்றுகோல் கோரி மனு அளித்ததையடுத்து, உடனடி நடவடிக்கையாக அவருக்கு தலா ரூ.535 மதிப்பிலான ரூ.1070 மதிப்பிலான 2 ஊன்றுகோலை வழங்கினார். தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, நடந்தப்படும் தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் 2026ல் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சிறப்பாக மேற்கொண்ட தன்னார்வலர்களான தொண்டு நிறுவன பிரதிநிதிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(பொது) முருகேசன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கிருஷ்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சிவக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (கல்வி) சர்தார், தனி தாசில்தார் (பேரிடர் மேலாண்மை) வெங்கடேசன், தேர்தல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் புவனேஸ்வரி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 4,374 பேருக்கு வேலைவாய்ப்பு!

கிருஷ்ணகிரி, ஜூலை.14–
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 4,374 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நான் முதல்வன் திட்டம் என்பது, தமிழக இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த கடந்த திமுக ஆட்சியின் போது, அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினால் கொண்டுவரப்பட்ட ஒரு திறன்மேம்பாட்டுத்திட்டமாகும். மாணவர்களுக்கு தேவையான உலக தரம் வாய்ந்த பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த திறன்களை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டம் கடந்த 2022ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. இதன் மூலமாக கடந்த சில ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் படித்த இளைஞர்களுக்கு தனியார்துறையில்வேலை வாய்ப்பு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இந்த திட்டத்தில் ஏராளமானோர் பயனடைந்துள்ளனர். இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 2 பொறியியல் கல்லூரிகள், 11 பாலிடெக்னிக் கல்லூரிகள், 16 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 6 தெழிற்பயிற்சி நிலையங்கள் என மொத்தம் 35 கல்வி நிலையங்களில் மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இதுவரை பொறியியல் மாணவ, மாணவிகள் 12,388 பேர், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் 62 ஆயிரத்து 491 பேர், பாலிடெக்னிக் கல்லூரி மாணவ, மாணவிகள் 13,979 பேர்என மொத்தம் 88 ஆயிரத்து 858 பேர் பயிற்சி பெற்று பயன் அடைந்துள்ளனர். இதே போல் நான் முதல்வன் திட்டத்தின் கீழ், வேலைவாய்ப்பிற்காக தனித்திறன், நேர்முக தேர்வு பயிற்சி போன்ற சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதன்படி கடந்த 5 ஆண்டுகளில் 4,374 பேர் முன்னனி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயன் அடைந்துள்ளனர் என்றனர்.

### வால்பாறை சாலையில்


# இருசக்கர வாகன ஓட்டியை துரத்திய குட்டிக்கொம்பன் யானை!

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்!!

ஆனைமலை ஜூலை, 14–
அடுத்த உள்ள ஆழியாறு, வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வாகனங்களில் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாகவே வால்பாறை மற்றும் நவமலை சாலைகளில் வகனத்தை விட்டுவெளியேறியானைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.

இதனை அடுத்து வனத்துறை அறிவுறுத்தலின்படி சுற்றுலா பயணிகளை சோதனைச் சாவடியில் இருந்து அனுப்பி வைக்கின்றனர்.



இந்த நிலையில் ஆழியார் சின்னார் பதி அருகே வால்பாறை சாலையில் குட்டிக் கொம்பன் என்கின்ற ஒற்றைக் காட்டு யானை சாலையில் வந்து கொண்டிருந்தது. அப்போது வால்பாறையில் இருந்து ஆழியார் நோக்கி வந்த இருசக்கர வாகனத்தை கண்டு காட்டு யானை உடம்பில் உள்ள புழுதி பறக்க ஆக்ரோசமாக துரத்தியது.

வாகன ஓட்டி புத்தி சாலித்தனமாக வாகனத்தை திருப்பி சென்றதால் நொடி பொழுதில் உயிர்த் தப்பினார்.

இதை சுற்றுலா வாகனத்தில் வந்த சுற்றுலாப் பயணிகள் வீடியோ எடுத்து தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

# குடோனில் குட்கா பதுக்கிய த.வெ.க. நிர்வாகி உள்பட 2 பேர் கைது!

பவானி.ஜூலை,14–
ஈரோடு மாவட்டம் பவானிஅந்தியூர் ரோட்டில் உள்ள குடோனில் குட்கா பதுக்கி விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் பெயரில் காவல்துறையினர் சோதனை நடத்தினர். அங்கு 8 கிலோ புகையிலை பொருள்களை பறிமுதல் செய்தனர். விசாரணையில் பவானி அந்தியூர் ரோடு டாணா சாவடி சந்தை பகுதியில் சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் பவானி நகர செயற்குழு உறுப்பினர் அருண் (40) பவானி காடையாம்பட்டி விஜபி நகர் பகுதியில் சேர்ந்தவர் ராஜ்குமார் (46) ஆகியோர் இதில் ஈடுபட்டு தெரியவந்தது.2 பேரையும் கைது செய்த போலீசார் ரூ.25 ஆயிரம் பணம் போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்திய கவெககொடிகட்டியகார் உள்பட 3 காரை பறிமுதல் செய்தனர். அதன்பின் காவல் நிலையம் அழைத்து வரப்





பட்ட இருவரும் இரவோடு இரவாக ஜமீன் விடுவி க்கப் பட்டனர். பிரபல குட்கா வியாபாரிகள் அரு ண் ராஜ் குமார் ஆகியோர் கர்நாடகா மாநிலத்தில் இருந்து குட்கா வாங்கி வந்து பவானி, குமாரபாளையம், சித்தோடு, நசியனூர், பெருந்துறை, மற்றும்சுற்றுவட்டாரபகுதியில் மொத்த விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளனர். இது தொடர்பாக இருவர் மீதும் குட்கா விற்பனை தொடர்பாக வழக்குகளை நிலுவையில் உள்ளது.தவெகபவானிநகர செயற்குழு உறுப்பினர்களான அருண் 2022ம் ஆண்டு 1.50 டன் குட்கா கடத்தலின் போது கைது செய்யப்பட்டார். அடுத்ததாக குமராபாளையத்தில் இருந்து பவானிக்குகாரில் 125 கிலோ குட்கா கடத்தி வழக்கில் ராஜ்குமார் கைது செய்யப்பட்டார். தவெக நகர பொறுப்பில் உள்ளவர்களுக்கு மிகவும் நெருக்கமானவரான இவர் தற்போது ஆளுங்கட்சி பிரமுகர் என்பதால் தனது விற்பனையைவிரிவாக்கம் செய்வதில் ஆர்வம் காட்டி வந்துள்ளார்.இந்தவிவகாரத்தைகசிவிடாமல் பாதுகாத்த போலீசார் யாருக்கும் தெரியாமல் இருக்கும் வகையில் இரவோடு இரவாக இருவரையும் ஜாமினில் விடுவித்தனர்.

### பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில்

# தொழில் நெறி திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி!

கிருஷ்ணகிரி, ஜூலை.14
கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் நேற்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்தையொட்டி நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கவுரிசங்கர் தலைமை வகித்தார். அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் திரு நாவுக்கரசு முன்னிலை வகித்தார். தனித்திறன் மேம்பாட்டு பயிற்சியாளர் நிமலன்மரகதவேல் மாணவர்களிடையே பல்வேறு தனித்திறன்கள் குறித்த முக்கியத்துவத்தினை விளக்கினார். மாவட்ட திறன் அலுவலர் சுந்தரம் பொறியியல் மாணவர்களுக்கான தற்போதைய வேலைவாய்ப்புகள் மற்றும் நுழைவுத்தேர்வுகள் விரிவாக பேசினார். பணி நியமன அலுவலர் மோகன்தாஸ்,துறைத்தலைவர் தலைவர் (மெக்கானிக்கல்) திருமால் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பேசியதாவது: இன்றைய இளைஞர்களது வேலைபெறும் திறனை அதிகரிக்கும் விதமாக, பல்வேறு திறன் பயிற்சிகளின் முக்கியத்துவம் கருதி இளைஞர்களிடையே திறன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் ஜூலை மாதம் 2வது வாரம் அனுசரிக்கப்படுகிறது. மேலும், பொறியியல் மாணவர்கள் தங்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய, பாடப் புத்தகங்களைத் தாண்டி தொழில்நுட்ப மற்றும் மென்மையான திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். கல்லூரி காலத்திலேயே நிறுவனங்களில் பயிற்சிகள் மேற்கொள்வது தொழில்முறை அனுபவத்தைத் மாணவர்களுக்கு தருகிறது. மாணவர்களுக்கு தமிழக அரசுஇலவசமாக,வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளிக்கிறது. இதனை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார். இதில் 235 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# வாய்க்கால் நீரில் மூழ்கி முதியவர் உயிரிழப்பு!

கோபி ஜூலை, 14–
கோபி அருகே,டி.என். பாளையம் அடுத்துள்ள காட்டூர் வீதியை சேர்ந்த பழனியப்பன் (84) என்பவர் கடந்த இரு தினங்களுக்கு முன்பு அரக்கன்கோட்டை வாய்க் காலுக்கு குளிப்பதற்காக சென்றவர் வீடு திரும்ப வில்லை எனத் தெரிகிறது.

அதனையடுத்து பழனியப் பனின் உறவினர்கள் அரக்கன்கோட்டை வாய்க்கால் பகுதியில் அவரை தேடியபோது பங்களாப்புதூர் பஞ்சாயத்து அலுவலகம் பின்புறம் உள்ள வாய்க்காலில் பழனியப்பனின் உடல் இறந்த நிலையில் கிடந்துள் ளதை பார்த்து போலீசாருக்கு தகவல் கொடுத்துள் ளனர்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பங்களாப்புதூர் போலீசார் பழனியப்பனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தபின் முதியவரின் இறப்பு குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


**மாண்புமிகு வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம்**
**அரூர்**
**ந.க.எண் 111/2026/அ1**
**நாள் 03..07.2026**

சாக்கன், த/பெ ஆதிமூலம், மருதிப்பட்டி (கிராமம்) மருதிப்பட்டி (அஞ்சல்) அரூர் (வட்டம்) தருமபுரி (மாவட்டம்)

மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அலுவலகம் அரூர்

பொதுஅறிவிப்பு

மேற்படி சாக்கன் த/பெ ஆதிமூலம் தயார் குட்டச்சி என்பவர் 27.06.1965 ல் தர்மபுரி மாவட்டம் அரூர் (வட்டம்) மருதிப்பட்டி கிராமத்தில் இறந்தார் இறந்ததை எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார் இந்தமனு மீது எவருக்காவது ஆட்சேப்பனை இருந்தால் இவ்விளம்பரம் செய்த பதினைந்து தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்

//வருவாய் கோட்டாச்சியர் உத்தரவுப்படி//

மனுதாரர்
சாக்கன் த/பெ ஆதிமூலம்,
மருதிப்பட்டி,(கிராமம்)
மருதிப்பட்டி (அஞ்சல்)
அரூர் (வட்டம்) ,
தருமபுரி (மாவட்டம்)



**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, HOSUR**
**A.S.No. 51 of 2025**
**In**
**O.S.No. 515 of 2021**

Saradha
...Petitioner/Appellant/ 12th defendant
Vs
Venkatesh Reddy and others
...Respondents/Plaintiffs
Sampandiappa
...Respondent No.4/Defendants No.1

Notice to Respondent No.4:
R-4, Sampingappa S/o Late Kempaiya, residing at Peddabebelagondapalli Village and Post, Denkanikottai Taluk, Krishnagiri District.

COURT NOTICE

Please take notice that the above appeal in AS. No. 51 of 2025 came up for hearing before the Hon'ble Additional District Judge, Hosur on 18.03.2026, the Hon'ble Additional District Judge, Hosur ordered to effect substituted service to the Respondent No.4 named above stands posted to 22.07.2026. You should appear before the Hon'ble Court on 22.07.2026 by 10.00 A.M. onwards in person or through a counsel and submit your objections, failing which the court may proceed to pass further order.

/By the order of the court/
K.GNANASEKAR, B.Com. LL.B.,
ADVOCATE
HOSUR-635109.



**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, HOSUR**
**IA.No. 1 of 2026 in A.S.No. 51 of 2025 In O.S.No. 515 of 2021**

Saradha
...Petitioner/Appellant/12th defendant
Vs
Venkatesh Reddy and others
...Respondents/Plaintiffs
Krishna Reddy and others
...Proposed Respondent No's. 17 to 19

Notice to Proposed Respondent No's. 17 to 19:
Proposed Respondent No.17, Krishna Reddy son of Dasappa,
Proposed Respondent No.18, Uma daughter of Dasappa,
Proposed Respondent No.19, Ammaiah daughter of Dasappa,
No. 17 to 19 is residing at Thumanapalli Village & Post, Hosur Taluk, Krishnagiri District.

COURT NOTICE

Please take notice that the above petition IA. No. 1 of 2026 in AS. No. 51 of 2025 came up for hearing before the Hon'ble Additional District Judge, Hosur on 18.03.2026, the Hon'ble Additional District Judge, Hosur ordered to effect Proposed Respondent No's. 17 to 19 in IA. No. 1 of 2026 in AS No. 51 of 2025 named above stands posted to 22.07.2026. You should appear before the Hon'ble Court on 22.07.2026 by 10.00 A.M. onwards in person or through a counsel and submit your objections, failing which the court may proceed to pass further order.

/By the order of the court/
K.GNANASEKAR, B.Com., LL.B.,
ADVOCATE
HOSUR-635109.



**IN THE COURT OF PRINCIPAL SUBORDINATE JUDGE, HOSUR**
**REA.No. 1 of 2024 in UN EP.No. of 2026 in OS.No. 33 of 2014**

M/s. Wire & Wire Products rep by its Sale Manager, Mr. S. Kannan
Petitioner/Decree Holder/Plaintiff
Vs
M/S. Sri Vari Metal Works Pvt. Ltd Rep by its Director and others
Respondents/Respondents/ Judgment Debtors/Defendants

Notice to Respondents/Judgment Debtors:
M/S. Sri Vari Metal Works Pvt. Ltd Rep by its Directors,
1. Vinodha Vidyababu, residing at No. 24, Eden Garden, Hosur Taluk, Krishnagiri District 635 126.
2. Govindhan Vidhyababu, residing at E14, SIDCO PhaseV, Hosur Taluk, Krishnagiri District 635 109.

COURT NOTICE

Please take notice that the above petition in REA. No. 1 of 2024 in UN EP. No. of 2026 in OS. No. 33 of 2014 came up for hearing before the Hon'ble Principal Subordinate Judge, Hosur on 10.07.2026, the Hon'ble Principal Subordinate Judge, Hosur ordered to effect substituted service to the Respondents/Judgment Debtors named above in REA. No. 1 of 2024 in UN EP. No. of 2026 in OS. No. 33 of 2014 stands posted to 21.08.2026. You should appear before the Hon'ble Court on 21.08.2026 by 10.00 A.M. onwards in person or through a counsel and submit your objections, failing which the court may proceed to pass further order.

/By the order of the court/
K.GNANASEKAR, B.Com., LL.B.,
ADVOCATE
HOSUR